## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி 1-8 - கொங்கலர்ந்த
## (திருவேங்கடம் 1)

1018 * கொங்கலர்ந்த மலர்க் குருந்தம் ஒசித்த * கோவலன் எம்பிரான் *
சங்கு தங்கு தடங்கடல் * துயில் கொண்ட தாமரைக் கண்ணினன் **
பொங்கு புள்ளினை வாய் பிளந்த * புராணர் தம்மிடம் * பொங்கு நீர்ச்
செங்கயல் திளைக்கும் சுனைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 1

1019 * பள்ளியாவது பாற்கடல் அரங்கம் * இரங்கவன் பேய்முலை *
பிள்ளையாய் உயிருண்ட எந்தை * பிரான் அவன் பெருகுமிடம் **
வெள்ளியான் கரியான் * மணிநிற வண்ணன் என்றெண்ணி * நாள் தொறும்
தெள்ளியார் வணங்கும் மலைத் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 2

1020 நின்ற மாமருது இற்று வீழ * நடந்த நின்மலன் நேமியான் *
என்றும் வானவர் கை தொழும் * இணைத் தாமரை அடி எம்பிரான் **
கன்றி மாரி பொழிந்திடக் * கடிது ஆநிரைக்கு இடர் நீக்குவான் *
சென்று குன்றம் எடுத்தவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 3

1021 * பார்த்தற்காய் அன்று பாரதம் கை செய்திட்டு * வென்ற பரஞ்சுடர் *
கோத்து அங்கு ஆயர் தம் பாடியில் * குரவை பிணைந்த எம் கோவலன் **
ஏத்துவார் தம் மனத்துள்ளான் * இடவெந்தை மேவிய எம்பிரான் *
தீர்த்த நீர்த் தடஞ்சோலை சூழ் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 4

1022 வண்கையான் அவுணர்க்கு நாயகன் * வேள்வியில் சென்று மாணியாய் *
மண் கையால் இரந்தான் * மராமரம் ஏழும் எய்த வலத்தினான் **
எண் கையான் இமயத்துள்ளான் * இருஞ்சோலை மேவிய எம்பிரான் *
திண் கைம்மா துயர் தீர்த்தவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 5

1023 எண்திசைகளும் ஏழுலகமும் வாங்கிப் * பொன் வயிற்றில் பெய்து *
பண்டு ஓர் ஆலிலைப் பள்ளி கொண்டவன் * பால்மதிக்கு இடர் தீர்த்தவன் **
ஒண்திறல் அவுணன் உரத்து உகிர் வைத்தவன் * ஒள் எயிற்றொடு *
திண்திறல் அரி ஆயவன் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 6

1024 பாரும் நீர் எரி காற்றினோடு * ஆகாசமும் இவை ஆயினான் *
பேரும் ஆயிரம் பேச நின்ற * பிறப்பிலி பெருகுமிடம் **
காரும் வார்பனி நீள்விசும்பிடைச் * சோரு[1] மாமுகில் தோய் தர *
சேரும் வார்பொழில் சூழ் * எழில் திருவேங்கடம் அடை நெஞ்சமே! 7

1025 அம்பரம் அனல் கால் நிலம் * சலமாகி நின்ற அமரர் கோன் *

---

[1] சேரு

வம்புலாம் அலர் மேல் * மலிமட மங்கை தன் கொழுனன் அவன் **
கொம்பின் அன்ன இடை மடக் குறமாதர் * நீளிதணந்தொறும் *
செம்புனம்மவை காவல் கொள் * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 8

1026 * பேசுமின் திருநாமம் எட்டெழுத்தும் * சொல்லி நின்று பின்னரும் *
பேசுவார் தமை உய்ய வாங்கிப் * பிறப்பு அறுக்கும் பிரானிடம் **
வாச மாமலர் நாறுவார் * பொழில்சூழ் தரும் உலகுக்கெல்லாம் *
தேசமாய்த் திகழும் மலை * திருவேங்கடம் அடை நெஞ்சமே! 9

1027 * செங்கயல் திளைக்கும் சுனைத் * திருவேங்கடத்து உறை செல்வனை *
மங்கையர் தலைவன் கலிகன்றி * வண்தமிழ்ச் செஞ்சொல் மாலைகள் **
சங்கை இன்றித் தரித்து உரைக்க வல்லார்கள் * தஞ்சமதாகவே *
வங்க மாகடல் வையம் காவலராகி * வானுலகு ஆள்வரே 10

**அடிவரவு:** கொங்கு பள்ளி நின்ற பார்த்தற்கு வண்கையான் எண்திசைகள்
பார் அம்பரம் பேசுமின் செங்கயல் தாய்